**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 434/2023**

**Prosecution witness : அ.சா.8** **Date : 17.07.2025.**

| | |
|---|---|
| **Name : சிவா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் சூராகவுண்டனூர் காட்டுவளவு குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்கிறேன். அ.சா.1யை எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

2) கடந்த 02.08.2019ம் தேதி இரவு 09.45 மணிக்கு மேச்சேரி பஸ் நிலையம் அருகில் உள்ள டீ கடை முன்பாக தர்மராஜ் என்பவர் யமாஹா இரு சக்கர வாகனத்தை குடிபோதையில் குறுக்காக நிறுத்தி பொதுமக்களை பார்த்து நான் ராணுவத்தை சேர்ந்தவன் என்னை யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லி கெட்ட வார்த்தையால் பேசினாரா என்றால் இல்லை. போலீசார் அங்கு வந்து பொது இடத்தில் இவ்வாறு செய்யக்கூடாது என்று சொன்ன பின்பு அவரை

கெட்ட வார்த்தையால் பேசி காவலர் பாபு என்பவரின் மூக்கின் மீது குத்தி ரத்த காயம் ஏற்படுத்தினாரா என்றால் இல்லை. பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டினாரா என்றால் இல்லை. உதவி ஆய்வாளர் பழனிசாமியை பார்த்து கெட்ட வார்த்தையால் பேசி அவரது இடது கால், இடது ஆள்காட்டி விரலை அடித்து ரத்த காயம் ஏற்படுத்தினாரா என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 434/2023**

**Prosecution witness : அ.சா.9** **Date : 17.07.2025.**

| | |
|---|---|
| **Name : நடராஜன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கோல்காரனூரில் குடியிருந்து ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 03.08.2019 ம் தேதி மதியம் 12.15 மணிக்கு நான் மற்றும் ஜானகிராமன் இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

3) சம்பவ இடமான  மேச்சேரி பேருந்து நிலையத்தில் உள்ள ஏழுமலை வாதியார் டீ கடை முன்பு வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –இல்லை

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.